ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2142 - 2019 සැප්තැම්බර් මස 20 වැනි සිකුරාදා - 2019.09.20

*2142 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 2430 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 2432 |


**கவனிக்க.-** தேருநர்களை பதிவுசெய்தல் (திருத்தம்) சட்டமூலம் 2019, செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2019, ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*2427-B 81561-5,403 (2019/09)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலூம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலூம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலூவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லூத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலூம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலூவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழராத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி – அநுராதபுரம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகப் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரர் 40 வயதிற்கு குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் அதிகபட்ச வயது 65 ஆகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பதாரர் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாதவராக இருத்தல் வேண்டும். தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகப் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய “இணைப்பு 1” உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2019, ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2019, ஓகத்து 12.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அநுராதபுரம் | பலாகல | கலாகம் பலாத பிரிவின் பலலுவெவ பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம். |

09-626

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் /மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரர், 40 வயதிற்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும். விதவைகள்/தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய ஏனைய விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய “இணைப்பு 1” உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2019, ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்குக் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2019, ஓகத்து 29.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | தும்பனை | மெதசிய பற்று பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் தும்பனை பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி. |
| கண்டி | பூஜாபிட்டிய | கலசிய பற்று 01 பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் ஹாரிஸ்பற்று பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி. |

09-644

திருத்தம்

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி மற்றும் விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவினை திருத்தஞ் செய்தல் – பதுளை மாவட்டம்

2019.08.09 ஆந் திகதிய 2136 ஆம் இலக்க இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டிருந்த கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருந்த பதவிக்குரிய விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2019.10.21 ஆந் திகதி வரை நீடிக்கப்படுவதுடன் விண்ணப்பம் கோரப்படும் பிரிவு ஹப்புத்தளை பிரிவின் பண்டாரவளை நகரத்தின் மேலதிக விவாகப் பதிவாளர் என திருத்தப்படல் வேண்டும் என இத்தால் அறிவிக்கின்றேன்.

2. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி மற்றும் பிரிவு மாத்திரம் திருத்தப்படல் வேண்டும் என்பதுடன் அந்த விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஏனைய விடயங்கள் அனைத்தும் அவ்வாறே அதிகாரம் செலுத்தும் என கருத்திற் கொள்ளவும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| பதுளை | பண்டாரவளை | ஹப்புத்தளை பிரிவில் பண்டாரவளை நகரத்தின் மேலதிக விவாகப் பதிவாளர் | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், பதுளை. |

09-645

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2019

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் I ஆம் தரத்தில் உள்ள அலுவலர்களுக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2019, நவெம்பர் மாத ஆரம்பத்தில் பேராதனையில் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இதன் பொருட்டு 2019, ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதிக்கு இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் முதலாம் தரத்திற்கு பதவி உயர்வு பெற்றுள்ள அலுவலர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. **பரீட்சை தொடர்பான விபரம்** .- இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் சேவை பிரமாணக் குறிப்பில் 08 ஆம் பந்தியின் ஒழுங்குவிதிகளுக்கு அமைய அங்கு ஐந்தாவது பின்னிணைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு பரீட்சை தொடர்பான விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**பரீட்சை தொடர்பான விபரம் :**

| வினாப்பத்திரம் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| முகாமைத்துவம் | 3 மணித்தியாலம் | 100 | 40 |

03. **பரீட்சையின் பொருட்டு பாடவிதானம்** :

| *வினாப்பத்திரம்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| முகாமைத்துவம் | 1. முகாமைத்துவக் கோட்பாடுகள்<br>2. முகாமைத்துவச் செயற்பாடுகள்<br>3. முகாமைச் சூழல்<br>4. பங்குபற்றுகை முகாமைத்துவம்<br>5. பொது மக்கள் தொடர்பு<br>6. நல்லாட்சி<br>7. ஒழுக்கநெறி |

சித்தியடையும் பொருட்டு வினாப்பத்திரத்திற்கு ஆகக் குறைந்தது 40% புள்ளிகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.

கீழே தரப்பட்டுள்ள 1966.09.04 ஆந் திகதியுடையதும் 701 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான திறைசேரி சுற்றறிக்கையில் 5 ஆம் பந்தியை கவனிக்குமாறு இவ்வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளுக்கு தோற்றும் உத்தியோகத்தர்கள் வேண்டப்படுகின்றனர்.

“திணைக்களப் பரீட்சைகளுக்குத் (பதவி உயர்வு மற்றும் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை உட்பட) தோற்றும் மொழி உத்தியோகத்தர் அரசாங்க சேவையில் சேர்வதற்கு தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழியிலாகும் அல்லது அரச கரும மொழியிலாகும். போட்டிப் பரீட்சை இல்லாமல் நேரடியாக சேவைக்கு சேர்ந்தவர்கள் விடயத்தில் பதவி உயர்வுக்கு அல்லது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கான மொழியாக இருக்க வேண்டியது உத்தியோகத்தர்கள் சேவையில் சேர்ந்து கொள்வதற்கு தகுதி பெற்ற அல்லது அரச கரும மொழியாகும்.”

05. இந்தப் பரீட்சை, சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பேராதனை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் அமையப் பெறும் பரீட்சை நிலையங்களில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பம் செய்த மொழி மூலத்தை பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்படமாட்டாது.

06. பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு உரித்தில்லாத மொழியில் பரீட்சைக்குத் தோற்றியமை பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது பரீட்சார்த்தத் தன்மை நீக்கப்படும்.

07. விண்ணப்பப் பத்திரங்கள் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய A4 தாளின் இருபக்கங்களிலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தில் தொடர் இலக்கம் 01 முதல் 06 வரை முதலாம் பக்கத்திலும் மீதி இரண்டாம் பக்கத்திலும் அமையுமாறும் தயாரிக்கப்படுதல் வேண்டும். அதற்கு உரிய தகவல்களை தமது சொந்த கையெழுத்தினால் மிகவும் தெளிவாக எழுதி நிரப்புதல் வேண்டும். அந்த விண்ணப்பத்தின் ஒளிப்படப்பிரதியை தம்வசம் வைத்திருப்பதானது பயன்மிக்கதாகும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பத்திற்கு அமைய அமைந்துள்ளதா என்பதனை சரிபார்த்துக்கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு அமையாதவிடத்து அல்லது பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறியத்தராமலேயே நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தயார்படுத்துகையில் அங்கு தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் அதன் தலைப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

08. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை பிரமாணக் குறிப்பிற்கு அமைய பரீட்சையை நடாத்தும் அதிகாரி கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் ஆவார். பரீட்சை நடாத்துவது மற்றும் பெறுபேறு வெளியிடுவது தொடர்பில் கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ் படிய வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுகின்ற தேசிய மட்டத்தினாலான பரீட்சைகளின் பொருட்டு உரித்தாகின்ற சகல சட்ட ஒழுங்குவிதிகளும் இப்பரீட்சைக்கும் பொருந்தும். அவ்வொழுங்கு விதிகளை பின்பற்றாதவிடத்து கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படுவர்.

09. விண்ணப்பங்கள் யாவும் 2019, ஒற்றோபர் 14 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கு கிடைக்கக்கூடியதாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு திணைக்களத் தலைவரினூடாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்,
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
த. பெ. இலக்கம் 13,
கெட்டம்பே, பேராதனை.

10. வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் தீர்மானத்திற்கு அமைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பம் பெற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியவராயின் அதற்குரிய பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்கு அமரும் மொழி மூலம், விண்ணப்பதாரரது கையொப்பம் மற்றும் திணைக்கள தலைவரது சான்றிதழ் என்பவற்றுடன் சரியாக பூரணப்படுத்தி அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பதாரருக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடனே அது தொடர்பில் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் மற்றும் திணைக்கள இணையதளத்தில் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் சென்றும் அனுமதி அட்டை கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதற்கு அமைய விண்ணப்பதாரரது முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் தொலைநகல் இலக்கம் அல்லது மின்னஞ்சல் முகவரி என்பன குறிப்பிட்டு கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்திற்கு உடனடியாக அறிவிக்க வேண்டும். அங்கு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் கேட்கப்படுகின்ற தேவையான தகவல்களை உறுதிப்படுத்தும் பொருட்டு நீங்கள் தன்வசம் வைத்திருக்கும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதி பரீட்சை கட்டணம் செலுத்துவதாக இருப்பின் பற்றுச்சீட்டின் பிரதி விண்ணப்பம் பதிவுத் தபாலிட்ட பற்றுச்சீட்டு என்பவற்றை தயார் நிலையில் வைத்து இருப்பது சிறந்ததாகும்.

11. மேலே 10 ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறும் பரீட்சார்த்திகளால் பின் சமர்ப்பிக்கப்படும் எழுத்து மூலமான கடிதத் தொடர்புகள் எதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

12. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின் போது பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை பரீட்சை மண்டப பொறுப்பாளர் உறுதி செய்து கொள்ளும் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்படுவது தேசிய ஆளடையாள அட்டை அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட கடவுச்சீட்டு அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரம் மாத்திரமேயாகும். விண்ணப்பத்தில் அல்லது பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்பதாரரது கையொப்பம் நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தரிடம் இருந்து சான்றுபடுத்தி இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் தமக்குரித்தான பரீட்சை மண்டபத்தில் உரிய சுட்டெண்ணின் கீழ் பரீட்சைக்கு அமருதல் வேண்டும். பரீட்சை தினமன்று தமது கையொப்பத்தை சான்றுபடுத்திக் கொண்ட அனுமதி அட்டையை பரீட்சை மண்டப பிரதானியிடம் கையளிக்க வேண்டும். தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர் பரீட்சைக்கு அமருவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

13. இப்பரீட்சை முதற்தடவையாக நடாத்தப்படுவதால் முதல் தடவையாக பரீட்சைக்கு அமருகின்ற விண்ணப்பதாரர்களிடம் இருந்து பரீட்சையின் பொருட்டு கட்டணம் அறவிடப்படமாட்டாது.

14. விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதி அட்டை ஒன்று வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமைக் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.

15. இங்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களுக்கிடையே மொழி மூலங்களில் ஏதாவது பொருந்தாத் தன்மை அல்லது வேறுபாடு காணப்படுமேயாயின், அவ்வேளையில் சிங்கள மொழிமூல அறிவித்தலே ஏற்புடையதாக அமையும்.

டாக்டர் கே. டி. ஆரியபால,
பணிப்பாளர் நாயகம்,
கால்நடை உற்பத்தி சுகாதாரத்
திணைக்களம்.

த. பெ. இலக்கம் 13,
கெட்டம்பே, பேராதனை,
2019, ஓகத்து 29.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பொது நிர்வாக, அனர்த்த முகாமை மற்றும் கால்நடை வள அபிவிருத்தி அமைச்சு**

**இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2019**

**THE THIRD EFFICIENCY BAR EXAMINATION FOR THE OFFICERS IN SRI LANKA ANIMAL PRODUCTION AND HEALTH SERVICE - 2019**

(கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்பட்டு இருத்தல் வேண்டும்.)

உத்தியோகத்தர் பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம் சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

01. (i) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(ii) இறுதியில் வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு பெயர் :-----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) (உதாரணம் GUNAWARDANE H.M.S.K)

(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

02. தபால் முகவரி ஆங்கில பெரிய எழுத்துக்களில் (அனுமதி அட்டை அனுப்புவதற்காக) :-----.

03. பால் :
பெண் - 1 ☐
ஆண் - 0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்.)

04. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

05. தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

06. பிறந்த திகதி : ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

07. பதவிப்பெயர் :-----.
(ஆங்கில பேரெழுத்துக்களில்)
திணைக்களத்தின் பெயர் :------.
(ஆங்கில பேரெழுத்துக்களில்)

08. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவைக்கு நியமனம் பெற்ற திகதி :-----.

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானது எனவும் விண்ணப்பத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தில் இப்பரீட்சையை எழுதுவதற்கு உரிமையுள்ளது எனவும், மேலும், பரீட்சை நடாத்துவது தொடர்பில் கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்படுவேன் எனவும் நான் இத்தால் உறுதி மொழிகின்றேன்.

------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

........................................................................................ ஊடாக

**கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல்.**

இதனகத்துக் காணப்படும் விபரங்களையுடைய பரீட்சார்த்தி பரீட்சைக்கு தோற்றத்தகைமை உடையவர் என்றும், குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தில் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரிக்கு தகைமையுள்ளது எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

------,
*திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவிப் பெயரும்.
(பதவி முத்திரை)

திகதி :-----.

* (கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்.- விண்ணப்பதாரர் இணைப்புச் செய்யப்பட்டுள்ள அமைச்சு/ திணைக்களம்/ மாகாண சபை/நகர சபை/அலகு/தலைவர் ஒருவரால் சான்றுபடுத்தல் வேண்டும்.)

09-625

---

## அரச கரும மொழிகள் திணைக்களம்

அரச கரும மொழிகள் திணைக்களத்தின் II ஆம் தர மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்), (தமிழ்/ஆங்கிலம்) மற்றும் (சிங்களம்/தமிழ்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2019

அரச கரும மொழிகள் திணைக்களத்தில் பின்வரும் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்) - 02 பதவிகள்
மொழிபெயர்ப்பாளர் (தமிழ்/ஆங்கிலம்) - 04 பதவிகள்
மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்) - 07 பதவிகள்

02. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்.**- ரூபா 36,585.00 - 10 × 660 - 11× 755 - 15 × 930 - ரூபா 65,440.00 (MN-6-2016) - (A)

03. இப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும்.

04. ஆட்சேர்ப்பு செய்யப்படும் விகிதம் :

| பிரிவு | வீதம் |
|---|---|
| திறந்த | 75% |
| மட்டுப்படுத்தப்பட்ட | 25% |
| திறன்கள் | ஏற்புடையதன்று |

**குறிப்பு.**- மட்டுப்படுத்தப்பட்ட பிரிவின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தகைமையுடைய போதியளவிலான விண்ணப்பதாரிகள் காணப்படாவிடில், அவ்வெற்றிட எண்ணிக்கையானது திறந்த பிரிவின் கீழ் நிரப்பப்படும். அவ்வாறு திறந்த பிரிவின் கீழும் தகைமையுடைய போதியளவிலான விண்ணப்பதாரிகள் காணப்படாவிடில், பின்வரும் தகைமைகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

05. **தகைமைகள்.**- II ஆம் தர மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்), (தமிழ்/ஆங்கிலம்) மற்றும் (சிங்களம்/தமிழ்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு பின்வரும் தகைமைகள் ஏற்புடையனவாகும் :-

5.1 **மொழிபெயர்ப்பாளர் (தமிழ்/சிங்களம்)** :

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் ஒன்றை கொண்டிருத்தல்

மற்றும்

(ii) க. பொ. த. (சா./த.) அல்லது அதற்குச் சமனான பரீட்சையில் சிங்களம் மற்றும் தமிழ் மொழியைப் பிரதான பாடமாகத் தோற்றி, திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது மற்றைய மொழியில் இரண்டாம் மொழி மட்டத்திலான திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது அங்கீகரிக்கக்கூடிய வகையில் அதனிலும் உயர் தகைமையுடன் முதலாம் மொழியில் திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல்.

மற்றும்

(iii) சிங்களம்/தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் கணினி தட்டச்சு செய்யக்கூடிய திறன் குறித்த செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

**மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்)** :

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டமொன்றைக் கொண்டிருத்தல்

மற்றும்

(ii) க. பொ. த. (சா./த.) அல்லது அதற்குச் சமனான பரீட்சையில் சிங்கள மொழியில் திறமைச் சித்தியையும் ஆங்கில மொழி அல்லது இலக்கியத்தில் திறமைச் சித்தியையும் கொண்டிருத்தல்.

மற்றும்

(iii) (சிங்களம்/ஆங்கிலம்) ஆகிய இரு மொழிகளிலும் கணினி தட்டச்சு செய்யக்கூடிய திறன் குறித்த செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

**மொழிபெயர்ப்பாளர் (தமிழ்/ஆங்கிலம்)** :

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டமொன்றைக் கொண்டிருத்தல்

மற்றும்

(ii) க. பொ. த. (சா/த) அல்லது அதற்குச் சமனான பரீட்சையில் தமிழ் மொழியில் திறமைச் சித்தியையும் ஆங்கில மொழி அல்லது இலக்கியத்தில் திறமைச் சித்தியையும் கொண்டிருத்தல்.

மற்றும்

(iii) (தமிழ்/ஆங்கிலம்) ஆகிய இரு மொழிகளிலும் கணினி தட்டச்சு செய்யக்கூடிய திறன் குறித்த செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

5.2 **உடல்சார் தகைமைகள் :**
சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும் பதவிக்குரிய பணிகளை ஆற்றுவதற்குமுரிய போதிய உடல் மற்றும் உளத் தகுதியுடையவராய் இருத்தல் வேண்டும்.

5.3 **ஏனையவை.**-

1. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;
2. விண்ணப்பதாரி சிறந்த நல்லொழுக்கத்தை உடையவராய் இருத்தல் வேண்டும்;

3. பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் விண்ணப்பப்படிவம் கோரப்படும் அறிவித்தலில்/வர்த்தமானியில் குறிப்பிடப்படும் திகதிக்கு சகல வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

5.4 தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் நிரந்தரப் பதவி வகிக்கும், அப்பதவி நிரந்தரமாக்கப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

06. **சேவை நிபந்தனைகள்** :

(i) நியமிக்கப்படும் எண்ணிக்கையும் பதவி நடைமுறைப்படும் திகதியும் அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். குறிப்பிட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையையோ சகல வெற்றிடங்களையோ நிரப்பும் அதிகாரம் அரசகரும மொழிகள் ஆணையாளருக்கு உண்டு.

(ii) பதவிக்கு நியமனம் பெற்று (03) வருடங்கள் கடப்பதற்கு முன் முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) நியமனம் பெற்று (05) வருடங்கள் கடப்பதற்கு முன் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 01/2014 இன் பிரகாரம் மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(vi) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளை நியமித்தல், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 1586/30 ஆம் இலக்க மற்றும் 2009.02.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நடைமுறை ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும் அமைய பதவியின் II ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

(v) அனைத்து ஆட்சேர்ப்புகளும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கும் எதிர்காலத்தில் அவ் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு செய்யப்படும் திருத்தங்களுக்கும் உட்படல் வேண்டும்.

(vi) அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய திணைக்கள/நிறுவனத் தலைவரின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

07. **வயதெல்லை**.- திறந்த : விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று 21 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

மட்டுப்படுத்தப்பட்ட : ஏற்புடையதன்று

8. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**.- எழுத்துப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதோடு, பொதுவான ஒரு நேர்முகப் பரீட்சையின் மூலம் தகைமைகள் பரிசீலிக்கப்படும்.

8.1 பரீட்சைக்குரிய பாடங்கள் :

| | வினாப்பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடையத் தேவையான புள்ளிகள் |
|---|---|---|---|---|
| மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்) | 1. மொழிபெயர்ப்பு - சிங்கள மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு | 03 மணித்தியாலம் | 100 | 40% |
| | 2. மொழிபெயர்ப்பு - ஆங்கில மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு | 03 மணித்தியாலம் | 100 | 40% |
| | 3. சிங்கள மொழி | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40% |
| | 4. ஆங்கில மொழி | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40% |

| | வினாப்பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடையத் தேவையான புள்ளிகள் |
|---|---|---|---|---|
| மொழிபெயர்ப்பாளர் (ஆங்கிலம்/தமிழ்) | 1. மொழிபெயர்ப்பு - தமிழ் மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு | 03 மணித்தியாலம் | 100 | 40% |
| | 2. மொழிபெயர்ப்பு - ஆங்கில மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு | 03 மணித்தியாலம் | 100 | 40% |
| | 3. தமிழ் மொழி | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40% |
| | 4. ஆங்கில மொழி | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40% |
| மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்) | 1. மொழிபெயர்ப்பு - சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு | 03 மணித்தியாலம் | 100 | 40% |
| | 2. மொழிபெயர்ப்பு - தமிழ் மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு | 03 மணித்தியாலம் | 100 | 40% |
| | 3. சிங்கள மொழி | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40% |
| | 4. தமிழ் மொழி | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40% |

8.2 பாட விதானம் :

| | வினாப்பத்திரத்தின் பெயர் | பாடவிதானம் |
|---|---|---|
| மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்) | 1. மொழிபெயர்ப்பு - ஆங்கில மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு | * நிர்வாக, சட்ட, விஞ்ஞான, தொழில்நுட்ப, கலை, இலக்கிய மற்றும் சமய ஆவணங்க ளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 03 பந்திகளை ஆங்கில மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்தல். |
| | 2. மொழிபெயர்ப்பு - சிங்கள மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு | * நிர்வாக,சட்ட,விஞ்ஞான,தொழில்நுட்ப,கலை, இலக்கிய மற்றும் சமய ஆவணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 03 பந்திகளை சிங்கள மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு மொழி பெயர்ப்புச் செய்தல். |
| | 3. சிங்கள மொழி | * கட்டுரை எழுதுதல், சாராம்சம் எழுதுதல், தரப்பட்ட பந்தியொன்றை சுருக்கமாக தமது சொற்களில் தெரிவித்தல், சொற்களின் பொருள் விளங்குமாறு வாக்கியங்கள் அமைத்தல், வாக்கியங்களிலுள்ள இலக்கணப் பிழைகளை திருத்துதல், பேச்சு வழக்குகளை விளக்குதல், எழுத்துக் கூட்டல். |
| | 4. ஆங்கில மொழி | * கட்டுரை எழுதுதல், தரப்பட்ட சொற்களைக் கொண்டு அவற்றின் பொருள் விளங்குமாறு வாக்கியங்கள் அமைத்தல், பேச்சு வழக்குகளை விளக்குதல், கூட்டு மற்றும் சிக்கலான வாக்கி யங்களை விளக்குதல். |

| | வினாப்பத்திரத்தின் பெயர் | பாடவிதானம் |
|---|---|---|
| மொழிபெயர்ப்பாளர் (தமிழ் /ஆங்கிலம்) | 1. மொழிபெயர்ப்பு - தமிழ் மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு | * நிர்வாக, சட்ட, விஞ்ஞான, தொழில்நுட்ப, கலை, இலக்கிய மற்றும் சமய ஆவணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 03 பந்திகளை தமிழ் மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்தல். |
| | 2. மொழிபெயர்ப்பு - ஆங்கில மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு | * நிர்வாக,சட்ட,விஞ்ஞான,தொழில்நுட்ப,கலை, இலக்கிய மற்றும் சமய ஆவணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 03 பந்திகளை சிங்கள மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு மொழி பெயர்ப்புச் செய்தல். |
| | 3. தமிழ் மொழி | * கட்டுரை எழுதுதல், சாராம்சம் எழுதுதல், தரப்பட்ட பந்தியொன்றை சுருக்கமாக தமது சொற்களில் தெரிவித்தல், சொற்களின் பொருள் விளங்குமாறு வாக்கியங்கள் அமைத்தல், வாக்கியங்களிலுள்ள இலக்கணப் பிழைகளை திருத்துதல், பேச்சு வழக்குகளை விளக்குதல், எழுத்துக் கூட்டல். |
| | 4. ஆங்கில மொழி | * கட்டுரை எழுதுதல், தரப்பட்ட சொற்களைக் கொண்டு அவற்றின் பொருள் விளங்குமாறு வாக்கியங்கள் அமைத்தல், பேச்சு வழக்குகளை விளக்குதல், கூட்டு மற்றும் சிக்கலான வாக்கியங்களை விளக்குதல். |
| மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்) | 1. மொழிபெயர்ப்பு - தமிழ் மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு | * நிர்வாக, சட்ட, விஞ்ஞான, தொழில்நுட்ப, கலை, இலக்கிய மற்றும் சமய ஆவணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 03 பந்திகளை சிங்கள மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்தல். |
| | 2. மொழிபெயர்ப்பு - சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு | * நிர்வாக,சட்ட,விஞ்ஞான,தொழில்நுட்ப,கலை, இலக்கிய மற்றும் சமய ஆவணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 03 பந்திகளை சிங்கள மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு மொழி பெயர்ப்புச் செய்தல். |
| | 3. சிங்கள மொழி | * கட்டுரை எழுதுதல், சாராம்சம் எழுதுதல், தரப்பட்ட பந்தியொன்றை சுருக்கமாக தமது சொற்களில் தெரிவித்தல், சொற்களின் பொருள் விளங்குமாறு வாக்கியங்கள் அமைத்தல், வாக்கியங்களிலுள்ள இலக்கணப் பிழைகளை திருத்துதல், பேச்சு வழக்குகளை விளக்குதல், எழுத்துக் கூட்டல். |
| | 4. தமிழ் மொழி | * கட்டுரை எழுதுதல், சாராம்சம் எழுதுதல், தரப்பட்ட பந்தியொன்றை சுருக்கமாக தமது சொற்களில் தெரிவித்தல், சொற்களின் பொருள் விளங்குமாறு வாக்கியங்கள் அமைத்தல், வாக்கியங்களிலுள்ள இலக்கணப் பிழைகளை திருத்துதல், பேச்சு வழக்குகளை விளக்குதல், எழுத்துக் கூட்டல். |

09. போலியான தகவல்களுக்கான தண்டனை.- விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும் போது கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சை சட்டதிட்டங்களுக்கமைய விண்ணப்பதாரி ஒருவர் பொருத்தமற்றவர் என்பது தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தித் தன்மையை இரத்துச் செய்ய முடியும். விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவலொன்று எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது பொய்யானது எனத் தெரியவந்தால் அவரை அரசாங்க சேவையிலிருந்து நீக்க முடியும். அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகத்தால் பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவதை அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்ற அங்கீகாரமாகக் கருதலாகாது. பரீட்சை நடாத்துவது தொடர்பாக அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்குப் பரீட்சார்த்திகள் கட்டுப்படல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறுபவர்கள் அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

10. இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பதங்களுக்கிடையில் ஏதேனும் இணக்கப்பாடு அல்லது வேறுபாடு ஏற்பட்டால் அப்போது சிங்கள மொழிப் பதங்களே மேலோங்கி இருத்தல் வேண்டும்.

11. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக் கட்டணம் 1000 ரூபாவாகும். இத்தொகையை திறைசேரி செயற்பாட்டுப் பணிப்பாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-99-00 இன் கீழ் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் அல்லது மாவட்ட செயலகத்திலும் செலுத்த முடியும். அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். (அதன் பிரதியை தம்வசம் வைத்திருத்தல் பயனுடையதாகும்.) எந்தவொரு காரணத்திற்காகவும் பரீட்சைக்காக செலுத்தப்பட்ட தொகை மீளச் செலுத்தப்படமாட்டாது.

12. விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும் போது கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இவ் ஆட்சேர்ப்புப் பரீட்சை சட்டதிட்டங்களுக்கமைய விண்ணப்பதாரி ஒருவர் பொருத்தமற்றவர் என்பது தெரிய வந்தால் நேர்முகப் பரீட்சைக்கு முன்னர் அல்லது நேர்முகப் பரீட்சை நடைபெறும் போது அல்லது பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தித் தகைமையை இரத்துச் செய்ய முடியும். விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவலொன்று எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது பொய்யானது எனத் தெரிய வந்தால் அவரை அரசாங்க சேவையிலிருந்து நீக்க முடியும்.

13. விண்ணப்பப்படிவத்தை A4 (24 × 29 cm ) அளவிலான தாளைப் பயன்படுத்தி,

(அ) இலக்கம் 1 முதல் 3.4 வரையான பந்திகள் முதல் பக்கத்திலும்
(ஆ) இலக்கம் நான்கிலிருந்து அடுத்த பக்கங்களிலும் உள்ளடக்கப்படுமாறு விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(இ) விண்ணப்பப்படிவம் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்படும் பெயர் சிங்கள மொழியிலான விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் மொழியிலான விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படல் வேண்டும். குறித்த தகவல்களை தமது கையெழுத்திலேயே தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

13.1 விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்), (தமிழ்/ஆங்கிலம்) மற்றும் (சிங்களம்/தமிழ்) - பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2019" எனக் குறிப்பிடுக.

13.2 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2019.10.11 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு கீழ்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். அத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் எந்தவொரு விண்ணப்பப்படிவமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

அரச கரும மொழிகள் ஆணையாளர் நாயகம்,
அரச கரும மொழிகள் திணைக்களம்,
இல. 341/7, கோட்டே வீதி,
இராஜகிரிய.

13.3 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபரினால், சமாதான நீதவானால், சத்தியப்பிரமாணம் செய்த ஆணையாளரினால், பிரசித்த நொத்தாரிசினால், முப்படையில் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரினால், அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் அல்லது நிரந்தர பதவிநிலைத் தரத்திலுள்ள உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

13.4 தற்போது அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை உரிய திணைக்கள/நிறுவனத் தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

14. விண்ணப்பதாரியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியான தேசிய ஆள் அடையாள அட்டை;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

15. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பில் அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். விண்ணப்பதாரர்கள் இவ்வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட பொது சட்டதிட்டங்களின் பிரகாரம் செயலாற்றுவதற்குக் கட்டுப்பட்டுள்ளனர்.

பிரின்ஸ் சேனாதீர,
அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகம்.

அரச கரும மொழிகள் திணைக்களம்,
341/7, கோட்டே வீதி,
இராஜகிரிய,
2019, செத்தெம்பர் 20.

மாதிரி விண்ணப்பப்படிவம்

மொழி பெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்), (தமிழ்/ஆங்கிலம்) மற்றும் (சிங்களம்/தமிழ்) பதவிக்கான விண்ணப்பம்

Application for the Post of Translator (Sinhala/English), (Tamil/English) & (Sinhala/Tamil)

விண்ணப்பிக்கும் பதவி ☐      ☐ அலுவலகப் பயன்பாட்டிற்கு

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் இடவும்)

1. மொழி பெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்)
2. மொழி பெயர்ப்பாளர் (தமிழ்/ஆங்கிலம்)
3. மொழி பெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்)

1. பெயர் :----.

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு./திருமதி/செல்வி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

2. முகவரி :

2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
2.2 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
2.3 அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
2.4 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
2.5 தொலைபேசி இலக்கம் :----.
2.6 விண்ணப்பதாரி நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் :----.
2.7 வசிக்கும் கால எல்லை :----.
2.8 கிராம அலுவலர் பிரிவு :----.

3. 3.1 பால் : பெண்-1, ஆண்-0 ☐

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

3.2 குடியியல் நிலைமை :
விவாகமானவர்/விவாகமாகாதவர்
விவாகமானவர் - 1 விவாகமாகாதவர் - 2

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

3.3 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.4 2019.10.11 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4. கல்வித் தகைமைகள் :

4.1 (அ) பட்டம் :
(ஆ) பட்டம் பெற்றுக்கொண்ட வருடம் மற்றும் பல்கலைக்கழகம் :
(இ) பட்டத்தில் பயின்றுள்ள பாடங்கள் :

4.2 க. பொ. த. (உயர் தரம்) :
(i) பரீட்சையின் வருடம் மற்றும் மாதம் :
(ii) சுட்டிலக்கம் :.............
(iii) பெறுபேறுகள் :

| பாடங்கள் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |

4.3 க. பொ. த. (சாதாரண தரம்) :
(i) பரீட்சையின் வருடம் மற்றும் மாதம் :
(ii) சுட்டிலக்கம் :
(iii) பெறுபேறுகள் :

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

5. நீர் எப்போதேனும் அல்லது ஏதேனும் குற்றத்திற்கு சட்டத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? (உரிய கூட்டினுள் ✓ அடையாளமிடுக.)

ஆம் ☐ இல்லை ☐

ஆம் எனில் அது தொடர்பான விபரங்கள் : ............................................................

6. பரீட்சைக் கட்டணம்
(i) பரீட்சைக் கட்டணத்தை செலுத்திய அலுவலகம்:
(ii) பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் திகதி :
(iii) செலுத்திய தொகை :

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கே ஒட்டவும். பற்றுச்சீட்டின் பிரதியொன்றை வைத்துக்கொள்ளவும்) |

07. விண்ணப்பதாரரின் உறுதியுரை

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் உண்மையானவை எனவும், இவ் ஆட்சேர்ப்புப் பரீட்சையின் நிபந்தனைகளின்படி நான் தகைமையற்றவர் எனத் தெரியவரும் சந்தர்ப்பத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடாத்தும் பொழுது அல்லது அதற்குப் பின்னர் எனது பரீட்சார்த்தத் தன்மையை இரத்துச் செய்வதற்கு எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானத்திற்கும் நான் உடன்படுகிறேன்.

------,

திகதி :-----. விண்ணப்பதாரரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:

இவ்விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பித்துள்ள ............................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும் அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர் : ................ பதவி :

திகதி :................ பதவி முத்திரை :

(தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு)

திணைக்களத் தலைவரின் சான்றுரை :

இவ் விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி .............................................. என்பவர் ................. ஆந் திகதியிலிருந்து இவ் அலுவலகத்தில் பணியாற்றுகின்றார் எனவும் அவரின் வேலை மற்றும் நடத்தை எப்போதும் திருப்திகரமானது எனவும் மேற்குறிப்பிட்டுள்ள சகல தகவல்களையும் இவ் அலுவலகத்திலுள்ள அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு நான் தனிப்பட்ட முறையில் பரிசீலித்தேன் எனவும் அவை சரியானவை எனவும் 2019 .......... ஆம் ஆண்டு ...................... மாதம் ............ ஆம் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறேன். தேர்ந்தெடுக்கப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது.

---------

திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.

பதவி :----.

திகதி :----. பதவி முத்திரை :----.

09-796

---

## சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

### ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை - 2019, செத்தெம்பர்

2014.10.11 ஆந் திகதிய 1883/ 17 ஆம் இலக்கமும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள சுகாதார சேவையின் வைத்திய உத்தியோகத்தர்கள் தொடர்பான நியதிச் சட்டக்கோவையின் 8 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்கள் II ஆம் தரத்திற்கு உயர்த்தப்படுவதற்கு முன்பும், பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்கள் தமது சேவையில் உறுதிப்படுத்துவதற்கு முன்பும், இதற்கு முன்னர் இத் திணைக்களப் பரீட்சையினை பூர்த்தி செய்யாத நிருவாக தரத்தையோ அல்லது விசேட வைத்திய தரத்தினையோ சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் அந்நியமனம் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து இரண்டு வருட காலத்தினுள் சித்தியடைய வேண்டியதுமான திணைக்களப் பரீட்சை 2019.10.20 ஆந் திகதி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது. பரீட்சை நடாத்தப்படும் இடமும் கால அட்டவணையும் பிரவேசப்பத்திரத்துடன் அனுப்பி வைக்கப்படும்.

2. **தகைமைகள்**.- உரிய பரீட்சையினைப் பூரணப்படுத்தியிராத ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களும், நியமனத்தில் உறுதிப்படுத்தப்படாத பல் சத்திர சிகிச்சை நிபுணர்களும் இந்தப் பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும். மேலும் இத்திணைக்களப் பரீட்சையினைப் பூரணப்படுத்தியிராத நிர்வாகத் தரத்தைச் சேர்ந்த வைத்திய உத்தியோகத்தர் தரத்தைச் சேர்ந்தவர்களும், விசேட வைத்திய நிபுணர் தரத்தைச் சேர்ந்தவர்களும் இப்பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும்.

3. **விண்ணப்பங்கள்**.- இச்சுற்று நிருபத்தில் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் போன்று விண்ணப்பதாரிகளினால் தயாரித்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் 2019.09.24 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் நிறுவனத் தலைவரிடம் கையளிக்கப்பட வேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகைமைகளையும் பூரணப்படுத்தியுள்ளதாக நிறுவனத் தலைவர் சான்றுப்படுத்திய பின் விண்ணப்பமானது "சுகாதார அமைச்சு, கொழும்பு 10,

இலக்கம் 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, 'சுவசிரிபாய கட்டிடம்', பணிப்பாளர் (பரீட்சை)" அவர்களுக்கு 2019.09.30 ஆந் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலின் மூலம் அனுப்ப வேண்டும். தனது விண்ணப்பத்துடன் முகவரி எழுதப்பட்ட ரூபா 45.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 9" × 4" அளவுள்ள கடித உறைகள் 2 அனுப்ப வேண்டும். (இதில் விரும்பிய வகையில் அலுவலக முகவரி அல்லது சொந்த முகவரியை எழுதலாம்).

**கவனிக்கவும்**.- மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய விண்ணப்பம் A4 தாளின் இரண்டு பக்கங்களையும் உபயோகித்து தயாரிக்கப்பட வேண்டும். முதற்பக்கத்தில் இலக்கம் 01-04 (உ) தொடக்கமும் இரண்டாம் பக்கத்தில் 04(ஊ)-09 தொடக்கமும் அமையும் வண்ணம் விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். மேற்படி தகவல்களுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

04. **பரீட்சைக் கட்டணம்**.-

(i) முதன் முறையாகப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள், பரீட்சைக் கட்டணத்தினின்றும் விலக்கப்படுவர். ஏனைய விண்ணப்பதாரர்கள் ஒரு விடயத்திற்கு ரூபா 25 வீதம் மதிப்பிழக்கப்படாத முத்திரைகளை விண்ணப்பத்தில் ஒட்டி அதன் மேல் தனது கையொப்பத்தையும் திகதியையும் இட்டு அதை செல்லுபடி அற்றதாக்குதல் வேண்டும்.

(ii) எக்காரணத்தைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சையொன்றின் பொருட்டு மாற்றவோ அல்லது மீளச் செலுத்தப்படவோ மாட்டாது.

05. **பரீட்சைக்கு உட்படுத்தல்**.-

(i) ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். அவ் அனுமதிப்பத்திரங்களை உரிய முறையில் நிரப்பி பரீட்சை நிலைய அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டைகள் சமர்ப்பிக்கப்படாத எந்த ஒரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

(ii) விண்ணப்பதாரர்களினால் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை நிலைய அதிபருக்குத் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதன் பொருட்டு கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ஆ) சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை ;
(இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் ;
(ஈ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

(iii) தவிர்க்க முடியாத காரணத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாதவிடத்து சுகாதார அமைச்சின் இணையத்தளத்தில் தங்களினது பரீட்சைச் சுட்டெண், பரீட்சை நிலையம் என்பவற்றினை பெற்றுக்கொண்டு தங்களது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய திணைக்களத் தலைவரின் கடிதத்துடன் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில், இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சுட்டெண்ணில் தாங்கள் பரீட்சையினை மேற்கொள்ள முடியும். அனுமதி அட்டை கிடைக்கப்பெற்றவர்கள் கட்டாயமாக கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொண்டு வருதல் வேண்டும். (கையொப்பத்தினை உறுதிப்படுத்திய கடிதம் அல்லது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினை முன்னளிப்பு செய்யாதவர்கள் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்).

(சுகாதார அமைச்சின் இணையத்தள முகவரி : www.health.gov.lk).

06. **பரீட்சைத் திட்டம்**.- இப்பரீட்சை மூன்று எழுத்து மூல கட்டுரை வினாப்பத்திரங்களையும் சிங்களம்/ தமிழ் வாய்மொழிப் பரீட்சை ஆகிய 04 பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிற்கும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. தேர்ச்சியடைவதன் பொருட்டு ஒரு விடயத்திற்கு குறைந்தபட்சம் 50 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு அமர்வில் அல்லது பல அமர்வுகளில் பிரிவுகளுக்குத் தோற்றி பரீட்சையைப் பூரணப்படுத்திக்கொள்ளலாம்.

07. **பரீட்சைப் பாடத்திட்டம்**.-

7.1 ***எழுத்துப் பரீட்சை***

7.1.1 *தாபனவிதிக்கோவை*

நேரம் 02 மணித்தியாலம். 08 வினாக்களில் 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

பாடவிதானம்

(i) சுகாதார அமைச்சின் சுகாதாரத் திணைக்களத்தின் பொதுவான ஒழுங்குவிதிகள்.
(ii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகள்.
(iii) தாபனவிதிக்கோவை

I ஆம் பிரிவு :- VI, VII, VIII, IX, XII, XIII, XIV, XV, XVI, XVII, XVIII, XXIII, XXIV, XXV, XXVI, XXVII, XXVIII, XXX, XXXI, XXXII அத்தியாயங்கள்.

II ஆம் பிரிவு :- XLVII, XLVIII ஆகிய அத்தியாயங்கள்.

7.1.2 *வைத்தியசாலைகள், மருந்துச்சாலைகள் என்பனவற்றின் நிர்வாகம்*

நேரம் : 1 1/2 மணித்தியாலம். 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

பாடவிதானம்

சுகாதாரக் கைந்நூல்

(i) வைத்தியசாலைகள், பொதுச் சுகாதார நிர்வாகம்

(ii) ஆய்வுகூட சேவை முகாமைத்துவம்

(iii) மருந்து முகாமைத்துவம்

7.1.3 *கணக்கியல் :*

நேரம் 02 மணித்தியாலம். 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்,

பாடவிதானம்

(i) சுகாதாரத் திணைக்களத்தில் களஞ்சியக் கணக்கு வைத்தல் தொடர்பான ஒழுங்குவிதிகள்

(ii) சுகாதாரத் திணைக்களத்தில் வழிகாட்டிக் கைந்நூலில் நிதி தொடர்பான பந்தி

(iii) சுகாதார வைத்திய உத்தியோகத்தர் ஒருவரின் நாளாந்த கடமைகளுக்கு ஏற்புடைய நிதிப்பிரமாணம்

| | |
|---|---|
| I ஆம் அத்தியாயம் - | நிதிப் பிரமாணம் 1, 2, 78 |
| II ஆம் அத்தியாயம் - | நிதிப் பிரமாணம் 90, 91, 101, 102, 103, 104, 105, 106, 107, 108, 109, 110, 113, 115, 118, 119 |
| III ஆம் அத்தியாயம் - | நிதிப் பிரமாணம் 124, 125, 126, 127, 128, 131, 133, 134, 135, 136, 137, 138, 139, 140, 142, 143, 151, 152, 154, 155, 156, 189 |
| V ஆம் அத்தியாயம் - | நிதிப் பிரமாணம் 200, 201, 215, 225, 238, 245, 255, 257, 260 |
| VI ஆம் அத்தியாயம் - | நிதிப் பிரமாணம் 380, 381, 382, 383, 384, 385, 386, 388, 389, 390, 391, 392, 393, 394 |
| VII ஆம் அத்தியாயம் - | நிதிப் பிரமாணம் 488, 493 |
| XIII ஆம் அத்தியாயம் - | நிதிப் பிரமாணம் 715, 716, 756, 757, 758 |

பெறுகை வழிகாட்டிக் கோவை :

1 ஆம் அத்தியாயம் - அனைத்துப் பிரிவுகளும்

2 ஆம் அத்தியாயம் - 2.3, 2.4, 2.5, 2.6, 2.7, 2.8

3 ஆம் அத்தியாயம் - 3.1, 3.2, 3.3, 3.4, 3.5, 3.6, 3.7, 3.8, 3.9

7.2 **சிங்களம்/தமிழ் வாய்மொழிப் பரீட்சை**.- சிங்களம்/தமிழ் ஆற்றலை அளப்பதன் பொருட்டு திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களினால் நடாத்தப்படும் வாய்மொழிப் பரீட்சையாகும். தனது நாளாந்த கடமைகளில் ஈடுபடும்பொழுது மேலோங்கும் நிகழ்வுகள் தொடர்பாக சிங்கள மொழி மூல உத்தியோகத்தர்களுக்கு தமிழ் மொழியிலும், தமிழ் மொழி மூல உத்தியோகத்தர்களுக்கு சிங்கள மொழியிலும் கலந்துரையாடுவதற்கு உத்தியோகத்தருக்கு உள்ள ஆற்றலைப் பரீட்சித்தல். (நேரம் : 10 நிமிடம்)

08. **பரீட்சை தொடர்பான ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடித்தல்**.- பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினைப் பார்த்து எழுதுதலும் தடை செய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவி செய்தலைத் தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரனியல் உபகரணங்களைப் பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

09. தயவுசெய்து இச்சுற்றுநிருபத்தை உங்கள் நிறுவனத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதன் ஏற்பாடுகளை மேற்கொள்ளவும். இத்தகவல்கள் www.health.gov.lk எனும் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

**குறிப்பு**.- இவ்வறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களில் ஏதாவது ஒவ்வாமை காணப்படின் சிங்கள மொழி மூல அறிவித்தலே வலுவுடையதாகும்.

கீதாமனீ சீ. கருணாரத்ன,
மேலதிக செயலாளர் (நிர்வாகம்) I,
சுகாதாரம், போஷணை மற்றும்
சுதேச வைத்திய அமைச்சு.

சுகாதாரம், போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,
"சுவசிரிபாய",
இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2019, செத்தெம்பர் 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக பிரயோகத்தின் பொருட்டு)

**ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை – 2019, செத்தெம்பர்**

01. (அ) (i) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் (தமிழில்) :..........................................................................................
..........................................................................................................................................

(ii) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-

(iii) முதல் எழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) :..........................................................................................
..........................................................................................................................................

(iv) முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :-

(ஆ) (i) பதவி (உரிய கூட்டினுள் (✓) அடையாளமிடுக).

(i) வைத்திய உத்தியோகத்தர் : (ii) பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர் :

(ii) தகுதிகூர் நிலைக்கால நியமனம் பெற்ற திகதி :..................................

(iii) ஆரம்ப தரத்திற்கு நியமிக்கப்பட்ட திகதி/ தரம் II :................................

02. நீங்கள் இம்முறை தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் விடயங்களுக்கு முன்னால் உள்ள கூட்டினுள் (✓) அடையாளத்தை இடவும். தோற்றாவிடின் (x) குறியை இடவும்.

வைத்தியசாலைகள் மருந்துச்சாலைகள் என்பவற்றின் நிர்வாகம்

தாபன விதிக்கோவை

கணக்கியல்

சிங்களம் வாய்மொழி

தமிழ் வாய்மொழி

03. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் (உரிய கூட்டினுள் (✓) அடையாளத்தை இடவும். )

சிங்களம் ஆங்கிலம் தமிழ்

04. (அ) (i) தற்பொழுது சேவையாற்றும் சேவை நிலையம் :-----.

(ii) சேவை நிலையம் நிர்வகிக்கப்படுவது : மத்திய அரசின்கீழ்

மாகாண அரசின்கீழ்

(ஆ) (i) மாகாண சபையாயின் உரிய மாகாணம் :-----.

(ii) அதற்குரிய மாவட்டம் :

(இ) கையடக்கத் தொலைபேசி இலக்கம் :

(ஈ) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

(உ) கீழ்வரும் பரீட்சை நிலையங்களுள் விரும்பிய பரீட்சை நிலையம்.- (தெரிவுசெய்யும் பரீட்சை நிலையத்திற்கு போதிய விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அண்மையிலுள்ள பரீட்சை நிலையத்திற்கு அல்லது சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் பரீட்சை நிலையத்திற்கு அழைக்கப்படுவர்) பொருத்தமான கூட்டினுள் சரி (✓) அடையாளமிடுக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | | கந்தானை | | அம்பாந்தோட்டை | | அம்பாறை | |
| களுத்துறை | | காலி | | பதுளை | | வவுனியா | |
| குருநாகல் | | அநுராதபுரம் | | இரத்தினபுரி | | பொலநறுவை | |
| கண்டி | | மட்டக்களப்பு | | யாழ்ப்பாணம் | | திருகோணமலை | |

(ஊ) அனுமதிப்பத்திரம் அனுப்புவதன் பொருட்டு பிழையற்ற தெளிவாக முகவரி எழுதப்பட்ட 9" × 4" அளவுள்ள ரூபா 45.00 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்ட கடித உறைகள் இரண்டு விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

(எ) (i) அஞ்சல் முகவரி (சிங்களத்தில் அல்லது தமிழில்) :-----.

(ii) அஞ்சல் முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----.

05. (அ) இதற்கு முன் இப்பரீட்சைக்குத் தோற்றி உள்ளீரா? :-----.

(ஆ) முதன் முறை அல்லாவிடின் முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளனவா? அவ்வாறு தோற்றி இருப்பின் இம்முறையின் பொருட்டு முத்திரைகள் ஒட்டியுள்ளதா? :-----.

| |
|---|
| முத்திரைக் கூடு<br>(முத்திரையை ஒட்டி அதன் மீது கையொப்பமிடுக.) |

06. விண்ணப்பதாரரின் உறுதியுரை:

எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவகையில்-

(i) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும், நான் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன்முறையாக என்றபடியால் கட்டணம் செலுத்தத் தேவையில்லை எனவும்/ முதன் முறை அல்லாதபடியால் ரூபா .......... பெறுமதியான முத்திரைகள் ஒட்டியுள்ளேனெனவும், இவ்விண்ணப்பத்திற்கு என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் பெறுமதி நீக்கம் செய்யப்படுவதற்கு முன்பு பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

(ii) சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு அமைந்து நடப்பதற்கும், இப்பரீட்சை தொடர்பான நியதிச் சட்டத்தின்படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தத் தன்மையை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எவ்விதத் தீர்மானத்திற்கும் நான் இணங்குகிறேன் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

07. சுயவிபரக் கோவையினைக் கையாளும் விடய உத்தியோகத்தரின் சான்றுரை :

இவ்விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் என்னிடம் கையளிக்கப்பட்டது என்றும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் சரியாகப் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இத்திணைக்களப் பரீட்சைக்கு தோற்றுவதற்குத் தேவையான தகைமைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும் இவ்விண்ணப்பப்பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

---------,
பெயர் :...................... கையொப்பம்.
திகதி:.................

08. நிறுவனத் தலைவரின் சான்றுரை :

திரு./ திருமதி/ செல்வி ................................ என்பவர் எனது நிறுவனத்தில் சேவை புரியும் வைத்திய உத்தியோகத்தர்/ பல் வைத்தியர் என்றும், இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறை/ அல்லாதபடியால் ரூபா ............ பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும்/ முத்திரை ஒட்டவேண்டியதில்லை எனவும் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்பதாரரின் பெயர்வழிக்கோவையிலுள்ள விபரங்களின்படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்குத் தகைமைகள் உண்டு எனவும் எனது முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

------
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :-----.

09. விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ் :

திரு./ திருமதி/ செல்வி ................................ என்பவர் ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர் ஒருவராக/ பல் சத்திர சிகிச்சை வைத்தியர் ஒருவராக எனது நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார் எனவும் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்பதாரரின் பெயர் வழிக்கோவையிலுள்ள விபரங்களின்படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்குத் தகைமைகள் உண்டு எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு/ விசேட இயக்கத்
தலைவரின் கையொப்பம்
(முத்திரை இடப்படுதல் வேண்டும்).

திகதி :-----.

(தேவையற்றவற்றைக் கீறிவிடவும்.)

09-828

---

கல்வி அமைச்சு

## பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சை (ஆங்கிலப் பாடத்துடன்) மற்றும் விஞ்ஞானமாணி (வெளிவாரி) பட்டத்தின் முதல் பரீட்சையில் சித்தியடைந்த ஆசிரியர்களை பல்கலைக்கழகத்தில் சேர்த்துக்கொள்ளல் - 2018/2019 கற்கை ஆண்டு

2018/2019 ஆம் கல்வியாண்டில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகளைத் தொடர்வதற்கு இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்காக பொதுக் கல்வித் தகைமை (வெளிவாரி) பரீட்சை (ஆங்கிலப் பாடத்துடன்) மற்றும் விஞ்ஞானமாணி (வெளிவாரி) பட்டத்தின் முதலாவது பரீட்சையில் சித்தியடைந்துள்ள அரசாங்க மற்றும் அரசாங்க அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(i) ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்ட கலைப் பட்டப் பாடநெறி.
(ii) விஞ்ஞானமாணிப் பட்டப் பாடநெறி.

02. விண்ணப்பதாரிகள் இதற்காகப் பின்வரும் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(i) கலைப் பட்டத்திற்கு விண்ணப்பிக்க எதிர்பார்க்கும் ஆசிரியர்கள் 2014 ஆம் ஆண்டு அல்லது அதற்கு பின்னர் நடாத்தப்பட்ட பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சையில் (ஆங்கிலப் பாடத்துடன் கூடிய) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ii) உயிரியல் விஞ்ஞானம், பௌதீகவியல் விஞ்ஞானம் அல்லது பிரயோக விஞ்ஞானம் ஆகிய பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்க எதிர்பார்க்கும் ஆசிரியர்கள் 2014 ஆம் ஆண்டு அல்லது அதற்கு பின்னர் நடாத்தப்பட்ட விஞ்ஞானமாணி (வெளிவாரி) பட்டத்தின் முதற் கட்டப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினத்தன்று ஆசிரியராக 5 வருட சேவையைப் பூர்த்தி செய்திருக்க வேண்டியதுடன் நியமனம் நிரந்தரமாக்கப்பட்டதாக இருக்கவேண்டும்.

(iv) ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி, கல்வியியல் கல்லூரி, பல்கலைக்கழகம் என்பவற்றிலோ தேசிய கல்வி நிறுவகத்திலோ பாடநெறிகளை தொடர்வதற்காகப் பதிவு செய்தவராக இருக்கக் கூடாது.

(v) யாதேனும் ஒரு பல்கலைக்கழகத்தில் நடாத்தப்படும் உயிரியல் விஞ்ஞானம், பௌதீகவியல் விஞ்ஞானம் அல்லது பிரயோக விஞ்ஞானம் போன்ற பாடநெறிகளுக்கு தெரிவு செய்யப்படவேண்டி இருப்பின் அதற்காக க.பொ.த (உயர் தர) பரீட்சையில் அல்லது விஞ்ஞானமாணி (வெளிவாரி) பட்டத்தின் முதற் கட்டப் பரீட்சையில் அல்லது உரிய பல்கலைக்கழகத்தினால் அடிப்படைத் தகைமையாக கருதப்படும் பாடங்களில் உரிய சித்தியினை பெற்றிருத்தல் வேண்டும்.

(vi) இப்பாடநெறியினை தொடர்வதற்கு தெரிவு செய்யப்படும் ஆசிரியர்களுக்கு கற்கை விடுமுறை வழங்கப்படவேண்டி இருக்கும் என்பதனால் கற்கை விடுமுறை பெற்றுக் கொள்ளக்கூடிய உரிமைகொண்ட ஆசிரியர்கள் மாத்திரமே விண்ணப்பித்தல் வேண்டும்.

03. இதனடிப்படையில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சை (ஆங்கிலப் பாடத்துடன்) அல்லது விஞ்ஞானமாணி (வெளிவாரி) பட்டத்தின் முதலாவது பரீட்சையில் பெற்றமொத்தப் புள்ளிகள் மற்றும் உரிய பாடங்களுக்குப் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையிலுமாகும்.

04. சம்பளத்துடனான விடுமுறை பெற்றுக் கொள்வதற்குள்ள உரிமைகள் பற்றி நேர்முகப் பரீட்சையின் போது வினவப்படும்.

05. பட்டம் பெற்றுக்கொண்ட பின்பு பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கான பொறுப்பை இவ் அமைச்சு ஏற்றுக்கொள்ளாது.

06. அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளில் சேவைசெய்யும் ஆசிரியர்களினால் சமர்ப்பிக்கப் படும் விண்ணப்பப்படிவங்களில் அப்பாடசாலையின் அதிபர்/முகாமையாளரால் உரிய ஆசிரியருக்காக கற்கை விடுமுறை அனுமதிக்கப்பட முடியும்/முடியாது என்பது தொடர்பாக குறிப்பிடுதல் வேண்டும்.

07. அரசாங்க ஆசிரியர்களின் விண்ணப்பப்படிவங்கள் அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர்களினாலும், அரசாங்க அனுமதி பெற்ற தனியார் பாடசாலை ஆசிரியர்களின் விண்ணப்பப் படிவங்கள் உரிய அதிபர்/ முகாமையாளர் ஆகியோராலும் உறுதிப்படுத்தப்படுதல்வேண்டும்.

சகல விண்ணப்பப்படிவங்களும் இங்கு கீழே குறிப்பிடப்படுகின்ற மாதிரிப்படிவத்திற்கேற்ப தயாரித்து இரண்டு (02) பிரதிகளாக "செயலாளர், கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு 2019.10.21 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தையிட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் "2018/2019 இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் (ஆசிரியர்களுக்காக)" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

எம். என். ரணசிங்க,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சு**

| |
|---|
| |

அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்

ஆங்கிலத்தைப் பாடமொன்றாக கொண்ட பொது கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சையில்
அல்லது விஞ்ஞானமாணி (வெளிவாரி) பட்டப் பாடநெறியின் முதலாவது பரீட்சையில்
சித்தியடைந்த ஆசிரியர்களுக்கான அனுமதி - கல்வியாண்டு 2018/2019

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் :....................................................................................................................................
...................................................................................................................
(ii) முழுப்பெயர் :..............................................................................................................................................
..........................................................................................

2. பால் :..............................................................................................................................

3. (i) பதவி :.................................................................... (ii) தரம் : .....................................................................................

4. முகவரி :...................................................................................................................................
(i) அலுவலக :.........................................................................................................................................................
.....................................................................................................................................................................
(ii) சொந்த :...........................................................................................................................................................
.....................................................................................................................................................................

5. தொலைபேசி :
(i) நிலையான இல. :.........................................................................................................................
(ii) கையடக்க இல. :.........................................................................................................................

6. மின்னஞ்சல் முகவரி :...................................................................................................................................

7. தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள இடம் :
(i) பாடசாலை :......................................................................................................................
(ii) வலயம் :..........................................................................................................................
(iii) மாவட்டம் :.....................................................................................................................
(iv) மாகாணம் :.....................................................................................................................

8. (i) முதல் நியமனத் திகதி :.............................................................................................................................
(ii) நிரந்தரமாக்கப்பட்ட திகதி :........................................................................................................................
(iii) சேவைக்காலம் (நியமனத் திகதியிலிருந்து விண்ணப்ப முடிவுத் திகதி வரை)
வருடங்கள் :.................... மாதங்கள் :......................... நாட்கள் :............................

9. ஆசிரியராகப் பதிவு செய்யப்பட்டுள்ள எண் :..............................

10. (i) பிறந்த திகதி :
ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.
(ii) வயது (விண்ணபத்தின் முடிவுத் திகதி அன்று)
வருடங்கள் :........................ மாதங்கள்:..................... நாட்கள் :......................

11. தகுதிகாண் பரீட்சையின் விபரங்கள் :
(பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட பெறுபேற்றுத் தாளின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று இணைக்கப்படல் வேண்டும்.)
(i) பரீட்சை :.......................................................................................................................
(ii) பல்கலைக்கழகம் :...............................................................................................................
(iii) பெறுபேறு :

| பாடம் | | தகுதிபெற்ற வருடம் | புள்ளிகள் | தரம் |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |

12. பின்பற்றுவதற்கு எதிர்ப்பார்க்கின்ற பட்ட பாடநெறியின் பெயரும் பாடங்களும் :
(i) பட்டப் பயில் நெறியின் பெயர் :-----.
(ii) பாடங்கள் : 1. ...............................................................................................................
2. ...............................................................................................................
3. ...............................................................................................................

13. நீர் தெரிவுசெய்யப்படின், அனுமதிக்கு எதிர்ப்பார்க்கப்படும் பல்கலைக்கழகங்களின் பெயர்களை விருப்புரிமை ஒழுங்கில் குறிப்பிடுக.
1. ..................................... 3. .....................................
2. ..................................... 4. .....................................

14. ஏதாவது ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியொன்றில், தேசிய கல்விக் கல்லூரியில், பல்கலைக்கழகத்தில் அல்லது கல்வி நிறுவகத்தில் வேறு பாடநெறியொன்றிற்கு ஏற்கனவே பதிவு செய்துள்ளீரா? -------------------------

ஆம் எனில், அதன் விபரங்கள் :.....................................

மேற்படி விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதி மொழிகிறேன்.

....................................,
திகதி :-----. விண்ணப்பதாரரின் கையொப்பம்.

வண./திரு./திருமதி/செல்வி ............................................... என்பவர் ............................. இலிருந்து செயற்படத்தக்கதாக ..................................... இல் (பாடசாலையின் பெயர்) ................................................ ஆக (பதவி/ தரம்) சேவையாற்றுவதுடன், இப்பாடசாலையில் அவரது கடைசிச் சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டது. மேற்படி பட்டப் பாடநெறியைப் பின்பற்றுவதற்கு அவர் விடுவிக்கப்படலாம்/விடுவிக்கப்பட முடியாது.

விண்ணப்பதாரிக்கு அவசியமான கற்கை விடுமுறையை நான் அங்கீகரிக்கின்றேன்/அங்கீகரிக்கவில்லை. (சிபாரிசு செய்யாவிட்டால், தயவு செய்து காரணங்களைக் குறிப்பிடுங்கள்.)

................................................................................................................................................................................................

................................................................................................................................................................................................

................................................................................................................................................................................................

சிபாரிசு செய்கிறேன்/செய்யவில்லை

..............................................
அதிபர்
(கையொப்பமும் உத்தியோகபூர்வ முத்திரையும்)

முகவரி :....................
திகதி :....................

சிபாரிசு செய்கிறேன்/செய்யவில்லை

..............................................
வலயக் கல்விப் பணிப்பாளரின்
(கையொப்பமும் உத்தியோகபூர்வ முத்திரையும்)

முகவரி :....................
திகதி :....................

சிபாரிசு செய்கிறேன்/செய்யவில்லை

..............................................
மாகாணக் கல்விப் பணிப்பாளரின்
(கையொப்பமும் உத்தியோகபூர்வ முத்திரையும்)

முகவரி :....................
திகதி :....................

09-1001

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.